MKS Tamil Friends / YOUTUBE SUBSCRIBE US FOR MORE MATERIAL

Reg.No. | | | | | | |

# இரண்டாம் திருப்புதல் பொதுத் தேர்வு - 2020

காலம்:3.00மணி வகுப்பு - 10 மதிப்பெண்கள்: 100

## தமிழ்

## (செய்யுள், உரைநடை)

## பகுதி - I (மதிப்பெண்கள் 15)

குறிப்பு: i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும். 15 x 1 = 15

1. மலர்கள் தரையில் நழுவும், எப்போது?
அ) அள்ளிமுகர்ந்தால் ஆ) தளரப்பிணைத்தால் இ) இறுக்கி முடிச்சிட்டால் ஈ) காம்பு முறிந்தால்
2. தமிழினத்தை ஒன்றுபடுத்தும் இலக்கியமாக ம.பொ.சி.கருதியது
அ) திருக்குறள் ஆ) புறநானூறு இ) கம்பராமாயணம் ஈ) சிலப்பதிகாரம்
3. 'பாடு இமிழ் பனிக்கடல் பருகி' என்னும் முல்லைப் பாட்டு அடி உணர்த்தும் அறிவியல் செய்தி யாது?
அ) கடல்நீர் ஆவியாகி மேகமாதல் ஆ) கடல் நீர் குளிர்ச்சி அடைதல்
இ) கடல் நீர் ஒலித்தல் ஈ) கடல் நீர் கொந்தளித்தல்
4. வாய்மையே மழைநீராகி இத்தொடரில் வெளிப்படும் அணி
அ) உவமை ஆ) உருவகம் இ) தற்குறிப்பேற்றம் ஈ) தீவகம்
5. பாரத ஸ்டேட் வங்கியின் உரையாடு மென்பொருள் எது?
அ) துலா ஆ) குலா இ) சீலா ஈ) இலா
6. 'உனக்குப் பாட்டுகள் பாடுகிறோம்
உனக்குப் புகழ்ச்சிகள் கூறுகிறோம்' - பாரதியின் இவ்வடிகளில் இடம் பெற்றுள்ளன நயங்கள் யாவை?
அ) உருவகம், எதுகை ஆ) மோனை, எதுகை இ) முரண், இயைபு ஈ) உவமை, எதுகை
7. இரு நாட்டு அரசர்களும் தும்பைப் பூவைச் சூடி போரிடுவதன் காரணம்
அ) நாட்டைக் கைப்பற்றல் ஆ) ஆநிரைகவர்தல் இ) வலிமையை நிலைநாட்டல்
ஈ) கோட்டையை முற்றுகையிடல்
8. இலக்கண முறையுடன் பிழையின்றிப் பேசுவதும் எழுதுவதும்
அ) வழு ஆ) வழாநிலை இ) வழுவமைதி ஈ) வேற்றுமை
9. 'சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி' என்னும் அடியில் பாக்கம் என்பது
அ) புத்தூர் ஆ) மூதூர் இ) பேரூர் ஈ) சிற்றூர்
10. 'வீட்டைத் துடைத்துச் சாயம் அடித்தல்' இவ்வடிகுறிப்பிடுவது
அ) காலம் மாறுவதை ஆ) வீட்டைத் துடைப்பதை இ) இடையறாதுஅறப்பணிசெய்தலை
ஈ) வண்ணம்பூசுவதை
11. சரியான அகரவரிசையைத் தேர்ந்தெடுக்க
அ) உழவு, மண், ஏர், மாடு ஆ) மண், மாடு, ஏர், உழவு
இ) உழவு, ஏர், மண், மாடு ஈ) ஏர், உழவு, மாடு, மண்

பாடலைப் படித்து பின்வரும் வினாக்களுக்கு (12, 13, 14, 15) விடை தருக.

பகர்வனர் திரிதரு நகரவீதியும்;
பட்டினும் மயிரினும் பருத்தி நூலினும்
கட்டு நுண்வினைக் காருகர் இருக்கையும்;
தூசும் துகிரும் ஆரமும் அகிலும்

12. இவ்வடிகள் இடம் பெற்றுள்ள நூல் எது?
13. பாடலில் அமைந்துள்ள மோனையை எடுத்து எழுதுக.
14. காருகர் - பொருள் தருக.
15. இப்பாடலில் காணப்படும் நறுமணப் பொருட்கள் யாவை?

Send Your Questions & Answer Keys to our email id mkstamilfriendskk@gmail.com

## பகுதி – II (மதிப்பெண்கள் 18)

### பகுதி – 1

**எவையேனும் நான்கு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.**
**21 ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.** 4 x 2 = 8

16. விருந்தினரை மகிழ்வித்துக் கூறும் முகமன் சொற்களை எழுதுக.
17. பாசவர், வாசவர், பல்நிணவிலைஞர், உமணர் – சிலப்பதிகாரம் காட்டும் இவ்வணிகர்கள் யாவர்?
18. வருங்காலத்தில் தேவையெனக் கருதுகின்ற செயற்கை நுண்ணறிவு பொதிந்த இரண்டு அறிவியல் கண்டுபிடிப்புகளைக் குறிப்பிடுக.
19. அவையகம் – குறிப்பு வரைக.
20. விடைகளுக்கேற்ற வினாக்கள் அமைக்க.
    அ) கா – என்பதற்குப் பாரந்தாங்கும் கோல் என்று பொருள்
    ஆ) வ.உ.சிதம்பரனார் ஆங்கிலேயருக்கு எதிராகச் சுதேசிக் கப்பல் நிறுவனத்தைத் தொடங்கினார்.
21. 'பல்லார்' எனத் தொடங்கும் திருக்குறளை எழுதுக.

### பிரிவு – 2

**எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் குறுகிய விடையளிக்க.** 5 x 2 = 10

22. தண்ணீர் குடி, தயிர்க்குடம் ஆகிய தொகைச் சொற்களை விரித்து எழுதுக. தொடரில் அமைக்க.
23. அ) நண்பா எழுது – இது எவ்வகைத்தொடர் என விளக்குக.
    ஆ) பாடி மகிழ்ந்தனர் – இது எவ்வகைத் தொடர் என விளக்குக.
24. கலைச்சொல் தருக. Biotechnology, Patent
25. இனமொழி விடையை எடுத்துக்காட்டுடன் விளக்குக.
26. கலவைச் சொற்றொடர்களாக மாற்றுக.
    அ) கூத்துக் கலைஞர் பாடத் தொடங்கினார். கூடியிருந்த மக்கள் அமைதியாயினர்.
    ஆ) பெருமழை பெய்தது. மரங்கள் வேரோடு சாய்ந்தன.
27. தணிந்தது – பகுபத உறுப்பிலக்கணம் தருக.
28. கீழ்க்காணும் சொற்களுக்கு இலக்கணகுறிப்புத்தருக.
    அ) உறுதுயர் ஆ) பயில்தொழில்

## பகுதி – III (மதிப்பெண்கள் 18)

### பகுதி – 1

**எவையேனும் இரண்டனுக்கு விடையளிக்கவும்.** 2 x 3 = 6

29. தாவரத்தின் அடிப்பகுதியைக் குறிப்பதற்கான சொற்கள் யாவை?
30. சங்க இலக்கியங்கள் காட்டும் அறங்கள் இன்றைக்கு தேவையானவையே என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டு தருக.
31. உரைப்பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.

    கிழக்கு என்பதற்குக் குணக்கு என்னும் பெயருமுண்டு. கிழக்கிலிருந்து வீசும் போது நான் கொண்டல் எனப்படுகிறேன். கடல் பகுதிக்கு மேலுள்ள மழைமேகங்களைச் சுமந்து வருவதால் மழைக்காற்று எனப்படுகிறேன்.

    அ) கிழக்கு என்பதன் வேறு பெயர் என்ன?
    ஆ) கொண்டல் காற்று எத்திசையிலிருந்து வீசுகிறது?
    இ) மழைக்காற்று என்று ஏன் அழைக்கப்படுகிறது?

### பிரிவு – 2

**எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க.** 2 x 3 = 6
**34 ஆவது வினாவிற்குக் கட்டாயமாக விடையளிக்க வேண்டும்.**

32. கூத்தனைக் கூத்தன் ஆற்றுப்படுத்தலைக் கூத்தராற்றுப்படை எவ்வாறு காட்டுகிறது?
33. வைத்தியநாதபுரி முருகன் குழந்தையாக அணிந்திருக்கும் அணிகலன்களுடன் செங்கீரை ஆடிய நயத்தை விளக்குக.
34. 'தூசும் துகிரும்' எனத் தொடங்கும் சிலப்பதிகாரப்பாடல் (அல்லது) நவமணி வடக்க யில்போல்' எனத் தொடங்கும் தேம்பாவணிப் பாடல்.

பிரிவு – 3

எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் சுருக்கமாக விடையளிக்க. 2 x 3 = 6

35. முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும் – இக்குறட்பாவினை அலகிட்டு வாய்ப்பாடு தருக.

36. தீவக அணியை விளக்குக.

37. ‘அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது – இதில் பயின்றுவரும் பொருள்கோளை விளக்குக.

பகுதி – IV (மதிப்பெண்கள் 25)

அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க. 5 x 5 = 25

38. அ) மெய்க்கீர்த்தி பாடலின் நயத்தை விளக்குக. (அல்லது)
ஆ) இறைவன், புலவர் இடைக்காடன் குரலுக்குச் செவிசாய்த்த நிகழ்வை நயத்துடன் எழுதுக.

39. அ) உங்கள் தெருவில் மின்விளக்குகள் பழுதடைந்துள்ளன. அதனால் இரவில் சாலையில் நடந்து செல்வோருக்கு ஏற்படும் இடையூறுகளை எழுதி ஆவன செய்யும்படி மின்வாரிய அலுவலருக்கு கடிதம் எழுதுக. (அல்லது)
ஆ) நாளிதழ் ஒன்றின் பொங்கல் மலரில் ‘உழவுத் தொழிலுக்கு வந்தனை செய்வோம்’ என்ற உங்கள் கட்டுரையை வெளியிட வேண்டி, அந்நாளிதழ் ஆசிரியருக்கு கடிதம் எழுதுக.

40. கீழ்க்கண்ட செய்யுளுக்கு ஏற்புடைய ஐந்து நயங்களை எழுதுக.
‘கத்துகடல் சூழ்நாகைக் காத்தான்தன் சத்திரத்தில்
அத்தமிக்கும் போது அரிசி வரும் – குத்தி
உலையிலிட ஊரடங்கும் ஓர் அகப்பை அன்னம்
இலையிலிட வெள்ளி எழும்’

41. படிவத்தை நிரப்புக. மேல்நிலை வகுப்பு – சேர்க்கை விண்ணப்பம்

42. பள்ளியிலும், வீட்டிலும் – உன் பணிகள் ஐந்து எழுதுக. (அல்லது)
The Golden Sun gets up early in the morning and starts the bright rays to fade away the dark. The milky clouds start their wandering. The colourful birds twitting their morning melodies in percussion. The cute butterflies dance around the flowers. The flowers fragrance fills the breeze. The breeze gently blows every where and makes everything pleasant.

பகுதி – V (மதிப்பெண்கள் 24)

பகுதி – 1

அனைத்து வினாக்களுக்கும் விரிவாக விடையளிக்கவும். 3 x 8 = 24

43. அ) தமிழின் சொல்வளம் பற்றியும் புதிய சொல்லாக்கத்திற்கான தேவை குறித்தும் தமிழ் மன்றத்தில் பேசுவதற்கான உரைக்குறிப்புகளை எழுதுக. (அல்லது)
ஆ) உங்கள் இல்லத்துக்கு வந்த உறவினருக்கு நீங்கள் செய்த விருந்தோம்பலை அழகுற விவரித்து எழுதுக.

44. அ) அழகிரிசாமியின் ‘ஒருவன் இருக்கிறான்’ சிறுகதையில் மனிதத்தை வெளிப்படுத்தும் கதை மாந்தர் குறித்து எழுதுக. (அல்லது)
ஆ) ‘அறிவியலாளர் ஸ்டீபன் ஹாக்கிங்குடன் விண்வெளிப்பயணம்’ என்னும் தலைப்பில் கற்பனைக்கதை ஒன்று எழுதுக.

45. அ) குறிப்புகளைக் கொண்டு கட்டுரை ஒன்று தருக.
முன்னுரை, விசும்பின் துளி – விண்ணின் மழைத்துளி – வான்சிறப்பு – வள்ளுவன் வாய்மொழி – மரம் வளர்ப்போம் – பசும்புல் நுனி – இயற்கையைப் போற்றுவோம் – முடிவுரை (அல்லது)
ஆ) குறிப்புகளைக் கொண்டு ஒரு பக்க அளவில் நாடகம் எழுதுக.
மாணவன் – கொக்கைப் போல, கோழியைப் போல – உப்பைப் போல – இருக்க வேண்டும் – கொக்கு காத்திருந்து கிடைக்கும் வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளும், குப்பையைக் கிளறிநாலும் தனது உணவை மட்டுமே எடுத்துக்கொள்ளும் கோழி – கண்ணுக்குத் தெரியாவிட்டாலும் உப்பின் சுவையை உணர முடியும் – ஆசிரியர் விளக்கம் – மாணவன் மகிழ்ச்சி,

II. Revision EXAMINATION
Exam No....1010....
Subject....தமிழ்....
Std.Sec....X - A....
Date....22.01.2020....

M. Fathima Pg.No.1

22/01/2020

95/100

| | |
|---|---|
| Total no. of written pages | 17 |
| Total No of additional sheets | 07 |

பகுதி - I

1) ஆ) தாரப்பிணைத்தல்
2) ஈ) சிலப்பதிகாரம்
3) அ) கலி நீர் ஆவியாகி மேகமாதல்
4) ஆ) உலகம்
5) ஈ) இலா
6) ஆ) மொணை, எதுகை.
7) இ) வலிமையை நிலைநாட்டல்
8) ஆ) வழாநிலை
9) ஈ) சிற்றூர்.
10) இ) இலையாறு அறப்பணிசெய்தலை.
11) இ) உழவு, ஏர், மண், மாடு.
12) சிலப்பதிகாரம்
13) பகர்வனர் - பட்டினும்
14) காருகர் - நெசவாளர்.
15) அகில், நறுமணப்புகைப்பொருள், நறுமணச்சாந்து.

15

பகுதி - II
பிரிவு - I

16. மு௫வன்:

* வாருங்கள், வந்து அமருங்கள்.
* வாருங்கள், உங்கள் வருகை எங்களுக்கு உவகை
* வாருங்கள், நீர் பருகுங்கள்.

2

17

Pg. No : 2

18. செயற்கை கருவி:

* ரோபோ
* செயற்கை நுண்ணறிவால் இயங்கும் போக்குவரத்து வசதி.

20. அ) "கா" என்றால் என்ன?

ஆ) யாருக்கு எதிராக சுதேசிக் கப்பல் நிறுவனம் தொடங்கியது

21. திருக்குறள்:

"பல்லார் பகைகொளலின் பத்தடுத்த தீமைத்தே
நல்லார் தொடர்கை விடல்."

பிரிவு - 2

24) அ) உழுதுயர் – வினைத்தொகை
ஆ) பயில்தொழில் – வினைத்தொகை.

27) தணிந்தது = தணி + த்(ந்) + த் + அ + து

தணி - பகுதி
த் - சந்தி, (ந்) ஆனது விகாரம்.
த் - இறந்தகால இடைநிலை.
அ - சாரியை
து - படர்க்கை வினைமுற்று விகுதி.

26) அ) கூத்துக் கலைஞர் பாடத் தொடங்கியதும் கூடியிருந்த மக்கள் அமைதியாயினர்.

ஆ) பெருமழை பெய்ததும் மரங்கள் வேரொடு சாய்ந்தன.

பகுதி-III
பிரிவு-I

30) அறம்:

* சங்க தமிழர்கள் போரில் அறத்தை கடைப்பிடித்தனர். ஆனால் இன்று இனம், மொழி, சாதி, நீர் மற்றும் எல்லை போன்ற போர் நடைபெறுகிறது.

* பண்டைய தமிழர்கள் கொடையில் அறம் இருந்தது. ஆனால் இன்றைக்கு உறவினருக்கு கூட உதவி செய்வதில்லை.

* வணிகத்திலும் பண்டைய தமிழர்கள் அறத்தை பின்பற்றினர். ஆனால் இன்றோ, "இப்போது நன்மை செய்தால் அதன் பயனை மறு பிறவியில் அடையலாம்" என்று செய்கின்றனர்.

31. அ) கிழக்கு என்பதன் வேறு பெயர் குணக்கு.
ஆ) கொண்டல் காற்று வீசும் திசை கிழக்கு.
இ) கடல் பகுதிக்கு மேல் உள்ள மேகங்களை சுமப்பதால் மழைக்காற்று ஆயிற்று.

பகுதி-II
பிரிவு-II

24. Biotechnology - உயிரித்தொழில்நுட்பம்
patent - காப்புரிமை.

23. அ) நண்பா எழுது - விளித்தொடர்.

ஆ) பாடி மகிழ்ந்தனன் - வினையெச்சத் தொடர்.

பகுதி-III

பிரிவு-II

34. சிலப்பதிகாரம்

"தூசும் துகிரும் ஆரமும் அகிலும்
மாசறு முத்தும் மணியும் பொன்னும்
அருங்கல வெறுக்கையொடு அளந்துகடை அறியா
வளந்தலை மயங்கிய நனந்தலை மறுகின்.

"பால் வகை தெரிந்த பகுதிப் பண்டமொடு
கூலம் குவித்த கூல வீதியும்".

- இளங்கோவடிகள்.

35. கூத்தர்:

"கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்
ஆற்றிடைக் காட்சி உறழத் தோன்றிப்
பெற்ற பெருவளம் பெறாஅர்க்கு அறிவுறீஇச்
சென்று பயன் எதிரச் சொன்ன பக்கமும்"

* கூத்தரோ, பாணரோ தான் பெற்ற செல்வத்தைக் கூறி, எதிர் வந்த கூத்தன் அவ்வள்ளலை நாடினால் நீயும் என்னைப் போன்று செல்வம் பெறலாம் என்று வழிப்படுத்துவது "கூத்தராற்றுப்படை".

பிரிவு-III

35. முயற்/சி திரு/வினை ஆக்/கும் முயற்/றின்மை
இன்/மை புகுத்/தி விடும்.

MKS Tamil Friends / YOUTUBE SUBSCRIBE US FOR MORE MATERIAL

Mydeen Matriculation Hr. Sec.School
Melacauvery, Kumbakonam-612 002
1010



| வ. எண் | சீர் | அசை | வாய்பாடு |
| --- | --- | --- | --- |
| 1. | முயற்/சி | நிரை நேர் | புளிமா |
| 2. | திரு/வினை | நிரை நிரை | கருவிளம் |
| 3. | ஆக்/கம் | நேர் நேர் | தேமா |
| 4. | முயற்/றின்/மை | நிரை நேர் நேர் | புளிமாங்காய் |
| 5. | இன்/மை | நேர் நேர் | தேமா. |
| 6. | புகுத்/தி | நிரை நேர் | புளிமா |
| 7. | விடும் | நிரை | மலர். |

37. குறள் : அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது.

பொருள்: இல்வாழ்க்கை அன்பும் அறனும் உடையதாக இருந்தால் அதுவே அவ்வாழ்க்கையின் பண்பும் பயனும் ஆகும்.

பொருள்கோள் : நிரல் நிறை பொருள்கோள்.

விளக்கம்: அன்பும், அறனும் என்னும் சொற்கள் மற்றும் பண்பும், பயனும் என்ற சொற்களை வரிசையில் நிறுத்தி அவ்வரிசைப்படியே பொருள்கொள்வது நிரல் நிறை பொருள்கோள் ஆகும்.

பகுதி – IV

39) அ)

அனுப்புநர்

அஅஅ (பெயர்),
அஅஅ (தெரு),
அஅஅ (ஊர்),
அஅஅ (மாவட்டம்).

Send Your Questions & Answer Keys to our email id mkstamilfriendskk@gmail.com

MKS Tamil Friends / YOUTUBE SUBSCRIBE US FOR MORE MATERIAL



பெறுநர்
மின்வாரிய அலுவலர் அவர்கள்,
மின்வாரிய அலுவலகம்,
அஅஅ (மாவட்டம்).

மதிப்பிற்குரிய ஐயா/அம்மா,
பொருள்: மின்விளக்கை சரிசெய்ய கோரி கடிதம்.

வணக்கம்.

நான் அஅஅ என்ற ஊரில் வசிக்கின்றேன். இங்கு முன்னூறு குடும்பங்கள் மற்றும் மூன்றாயிரத்திற்கும் மேற்பட்ட மக்களும் வசித்து வருகின்றனர். இங்கு வேலைக்குச் செல்வோர் மற்றும் பள்ளிக் கல்லூரிக்குச் செல்வோர் அதிகம் உள்ளனர். ஆனால் இங்கு மின்விளக்கு சரியாக எரிவதில்லை. எனவே, வயதானவர்கள் முதல் அனைவரும் இன்னலுக்கு உள்ளாகின்றனர். இரவில் திருடர்களின் நடமாட்டமும் அதிகம்.

எனவே, மின்விளக்கை சரிசெய்து தந்து எங்கள் துயரங்களைப் போக்குமாறு மிகவும் பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன்.

நன்றி,

இப்படிக்கு,
தங்கள் உண்மையுள்ள,
அஅஅ (பெயர்).

இடம்: அஅஅ (ஊர்),
நாள்: 22.01.2020.

உறைமேல் முகவரி
பெறுநர்
மின்வாரிய அலுவலர் அவர்கள்
மின்வாரிய அலுவலகம்,
அஅஅ (மாவட்டம்).

Send Your Questions & Answer Keys to our email id mkstamilfriendskk@gmail.com

Mydeen Matriculation Hr. Sec.School
Melacauvery, Kumbakonam-612 002

1010.

Pg. No: 7

38 ஆ)

புலவர்:

* புலவர் இடைக்காடனார் தனது அறிவாற்றலினால் பாண்டிய மன்னன் குசேல பாண்டியனை புகழ்ந்து பாடினார்.

* ஆனால் மன்னன் அதை பொருட்படுத்தாமல் அவமதித்தான்.

* எனவே, புலவர் மிகவும் கோபத்துடன்

இறைவனிடம் கூறியது:

* "திருவாலவாயில் உறையும் இறைவனே!" அடுகிய வேப்பமாலையை அணிந்த குசேலபாண்டியன் பொருட்செல்வத்தோடு கல்விச் செல்வமும் மிக உடையவன் எனக் கூறக் கேட்டு, அவன் முன் சொற்கள் நிரம்பிய கவிதை பாடினேன்.

* மன்னன் அவமதித்தது என்னை அல்ல சொல்லின் பொருளான உன்னையே இகழ்ந்தான்.

* இதையடுத்து மன்னன் இறைவனிடம் சென்று தான் பண்ணிய குற்றம் என்னவென்று கேட்டார்.

* அதற்கு இறைவனோ உன் நாட்டின் மீதோ, உன் மீதோ எந்த தவறும் இல்லை, நீ இடைக்காடனாரை இகழ்ந்ததே காரணமாகும் என்றார்.

> "புண்ணிய புலவீர் யானே இப்போது இடைக்காடனார்க்கு பண்ணிய குற்றம் எல்லாம் பொறுக்க -என"!!

மன்னிப்பு:

* மன்னன் தன் தவறை உணர்ந்து புலவரின் இறைக்கும் அவர் மீதான இரக்கத்திற்கும் மன்னிப்பு வேண்டி மரியாதை செய்தான்.

40. நயம்:

முன்னுரை:

* இக்கவிதையில் காளமேக புலவர் கூறியுள்ள நயத்தை இக்கட்டுரையில் காண்போம்.

பொருள் நயம்:

* இக்கவிதையில் இவர் விருந்தோம்பலை பற்றிக் கூறியுள்ளார்.
* விருந்தினருக்கு விருந்தளிக்க போதிய பணம், பொருள் இல்லாவிட்டாலும் கூட தன பொருள்களை விற்று காசு வாங்கி விருந்தளித்தனர்.

தொடை நயம்:

"தொடையற்ற பாட்டு
நடையற்று போகும்"...

தொடை நயம்

எதுகை | மோனை | முரண் | இயைபு.

Mydeen Matriculation Hr. Sec.School
Melacauvery, Kumbakonam-612 002
1010.



மோனை:

"மோனையற்ற பாட்டு
சேனையற்ற நாடு"...

* பாடலின் சீர் மற்றும் அடிகள் தோறும் முதல் எழுத்து ஒன்றி வருவது மோனை ஆகும்.

எ.கா: அத்தமிக்கும் - அன்னம்

எதுகை:

"மதுரைக்கு வைகை அழகு
செய்யுளுக்கு எதுகை அழகு"...

* பாடலின் சீர் மற்றும் அடிகள் தோறும் இரண்டாம் எழுத்து ஒன்றி வருவது எதுகை ஆகும்.

எ.கா: கத்துகடல் - அத்தமிக்கு

இயைபு:

"செய்யுளின் இயைபு
பார்ப்போருக்கு வியப்பு"...

* பாடலின் சீர் மற்றும் அடிகள் தோறும் இறுதி சொற்களின் ஓசை ஒன்றி வருவது இயைபு.

எ.கா:

அத்தமிக்கும் - உறங்கும்

தலைப்பு:

"தலைப்பில்லா கவிதை
தாளில்லா காலை"...

* இப்பாடலுக்கு "விருந்தோம்பல்" என்ற தலைப்பு மிகவும் பொருத்தமாக இருக்கும்.

முடிவுரை:

இப்பாடலின் நயத்தை இக்கட்டுரையில் கண்டோம்.

42. மொழிபெயர்க்க:

* சூரியனின் ஒளிக்கதிர்கள் காலையில் விழுந்தன. இருள் மறைந்தன. வெண்ணிற மேகம் வானை சூழ்ந்தன. பறவைகள் இசைப்பாடின. வண்ணத்துப்பூச்சிகள் பூக்களைச் சுற்றி நடனமாடியது. பூவின் நறுமணம் காற்றில் பரவியது. அக்காற்றால் அனைத்தும் அமைதியாயின...

பகுதி - V

பிரிவு - I

43. அ) விருந்தோம்பல்:

பொருளடக்கம்:

* முன்னுரை
* விருந்தினர்
* விருந்தோம்பல்
* முடிவுரை.

MKS Tamil Friends / YOUTUBE SUBSCRIBE US FOR MORE MATERIAL

Hr. Sec.School ...612 002

22/12/2021



முன்னுரை:

* எங்கள் இல்லத்துக்கு வந்த உறவினருக்கு நாங்கள் செய்த விருந்தோம்பலை பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

விருந்தினர்:

* நானும் என் தங்கையும் விளையாடிக்கொண்டிருக்கும் நேரம், என் அம்மா சமையல் அறையில் அசைவம் சமைத்துக் கொண்டிருந்தார்.

* என் தந்தை வேலை என்று வெளியே சென்று வரும் வழியில் என் மாமாவும், மாமியும் கடைவீதியில் இருந்தனர்.

* அவர்களை கையோடு வீட்டிற்கு அழைத்து வந்தனர். அவர்களும் சம்மதித்து விருந்திற்கு வந்தனர்.

* நானும் என் தங்கையும் மிகவும் மகிழ்ச்சியுடன் அவர்களை வரவேற்றோம்.

* பின்னர் நான் அவர்களை தண்ணீர் குடிக்குமாறு கூறினேன்.

* என் தாய் அவர்களுக்கு தேனீர் போட்டு சூடாக எடுத்து வந்தாள்.

* வரும் வழியில் அவர்கள் எனக்கும், என் தங்கைகளுக்கும், என் குடும்பத்தினருக்கும் உணவுப் பொருள், புதிய ஆடை வாங்கி வந்தனர்.

Send Your Questions & Answer Keys to our email id mkstamilfriendskk@gmail.com

MKS Tamil Friends / YOUTUBE SUBSCRIBE US FOR MORE MATERIAL



* என் தந்தை அவர்களை அழைத்து வந்து என்னை மிகவும் மகிழ்வித்தார்.

* அவர்களை அந்த நாள் முழுவதும் மகிழ்ச்சியாக வைத்திருந்தோம்.

* சேர்ந்து அனைவரும் ஒன்றாக ஊரைச் சுற்றி மகிழ்ந்தோம்.

* அன்று எங்கள் ஊரில் திருவிழா ஏற்பாடு மிகவும் கோலாகலமாக நடைபெற்றது.

* அத்திருவிழாவில் நாங்கள் அனைவரும் பங்குபெற்று மிகவும் மகிழ்ந்தோம்.

* இவ்வாறு என் வீட்டில் விருந்தினர்களுடன் மிகவும் மகிழ்வுடன் விருந்தோம்பலை கொண்டாடினோம்.

விருந்தோம்பல்:

* அவர்கள் வீட்டிற்கு வரும் வழியில் என் தந்தை குளிர்ந்த பழரசத்தைப் பருக வாங்கி தந்தார்.

" வாருங்கள்,
உங்கள் வருகை எங்களுக்கு உவகை"

போன்ற முகமன் சொற்களை கூறி அவர்கள் மனதை மகிழ செய்தோம்.

Send Your Questions & Answer Keys to our email id mkstamilfriendskk@gmail.com

MKS Tamil Friends / YOUTUBE SUBSCRIBE US FOR MORE MATERIAL

Mydeen Matriculation Hr. Sec.School
Melacauvery, Kumbakonam-612 002
1010



* அவர்களுக்கு காலை மற்றும் மதிய உணவையும் எங்கள் வீட்டிலேயே வழங்கினோம்.

முடிவுரை:

* இவ்வாறு அவர்களுடன் மகிழ்ச்சியாக பொழுதை கழித்தோம். இவ்வாறு எங்கள் இல்லத்துக்கு வந்த விருந்தினரை மகிழ்வித்து விருந்தோம்பல் செய்வித்தோம்.

---

44) அ) ஒருவன் இருக்கிறான்.

பொருளடக்கம்:
* முன்னுரை
* வீரப்பனின் கடிதம்
* ஒருவன் இருக்கிறான்
* முடிவுரை.

முன்னுரை:

* அழகிரிசாமியின் "ஒருவன் இருக்கிறான்" என்ற சிறுகதையில் மனிதத்தை வெளிப்படுத்தும் கதை மாந்தர் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

வீரப்பனின் கடிதம்:

* யாரும் இல்லா ஒரு அனாதை மீது வீரப்பனின் அன்பை என்னவென்று சொல்வது!

* அவனது நண்பருக்கு உடல்நிலைசரியின்றி இருப்பதை அறிந்த அவன் தான் கடன் வாங்கி வந்து அவனுக்கு உதவினான்.

Send Your Questions & Answer Keys to our email id mkstamilfriendskk@gmail.com

* அவனது நண்பன் "இப்புசாமி" அவன் வேலை செய்த கடைக்கு எதிர் கடையில் வேலை செய்யும் வேலைக்காரன் ஆவான்.

* அவனது கடிதத்தில் அவன் கடனாக வாங்கிய மூன்று காசுகளையும் மூன்று சாத்துக்குடியையும் மற்றும் அவனது அன்பையும் அவன் அதில் வைத்து அனுப்பினான்.

* அவன் தனது நண்பன் இப்புசாமி மீது மிகுந்த அன்பு கொண்டான்.

* சில நேரங்களில் யாரிடமாவது கடன் வாங்கி வந்து அவனுக்கு உணவு அளித்தான்.

* அவன் தந்த கடனை பார்க்கும் போதெல்லாம் இப்புசாமி ஞாபகம் வரும் என்று கூறினான்.

* அவன் இல்லாமல் சாப்பிட சோறு சோறாகவே இல்லை.

* அவனது பசி, தூக்கம் எல்லாம் இப்புசாமி இல்லாமல் மாயமானது.

* நாள் தோறும் அவன் நினைவிலேயே இருந்தான்.

ஒருவன் இருக்கிறான்:

* பிறர் தன் வருத்தத்தை தெரிவித்தான்.

Mydeen Matriculation Hr. Sec. School
Melacauvery. Kumbakonam-612 002
1010.



* பிறகு தன் வருத்தத்தை கூறி ஒரு கடிதம் எழுதி அதில் அவன் கடனாக வாங்கிய கடனாக வாங்கிய மூன்று ரூபாய் மற்றும் சிறந்த படங்கள் வைத்து அனுப்பி வைத்தார்.

* அவன் இல்லாமல் சாப்பிட சோறு சோறாகவே இல்லை.

* பிறகு இன்னும் ஒருமுறை வெளியூரிடமாவது பணம் வாங்கி வந்து அப்புசாமியை சந்திப்பதாக வீரப்பன் தன் கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

* இவ்வாறு வீரப்பன் ஒருவரிடம் கொடுத்த கடிதத்தில் இருந்தது.

* அதை படித்த தங்கவேலுவின் கண்கள் வருத்தத்தில் சிவந்தன.

* அவன் தந்த அந்த காகிதத்தை அப்புசாமியிடம் சொல்லியவாறு வீரப்பன் தங்கவேலுவிடம் கொடுத்து சென்றார்.

* அக்கடிதத்தை படித்த தங்கவேலுவின் கண்கள் சோகத்தில் மற்றும் செய்த தவறுகளை எண்ணியும் மிகவும் சிவந்தன.

முடிவுரை:

* இதுவே, "அடிகிளிசாமியின்" ஒருவன் இருக்கிறான் என்ற சிறுகதையில் வெளிப்படும் மனிதம் ஆகும்.

45) ஆ) கட்டுரை : [நாடகம்].

நாடகம்:

இடம்: பள்ளி வளாகம்.
நாள்: தேர்வின் இறுதி நாள்.
கதாபாத்திரம்: ஆசிரியர், மாணவன்.

பகுதி - I.

மாணவர்கள்: வணக்கம் ஐயா.

ஆசிரியர்: வணக்கம் அமருங்கள்.

மாணவர்கள்: என்ன பாடம் நடத்த உள்ளீர் ஐயா?

ஆசிரியர்: இன்று பாடம் இல்லை, அறிவுரை!

மாணவர்கள்: அறிவுரை யாது?

ஆசிரியர்: பொதுத்தேர்வுகள் முடிந்தன அல்லவா?

மாணவன்: ஆம்! முடிந்தது.

ஆசிரியர்: இறுதி மேல் படிப்பிற்கான வேலைபாடுகளை தொடங்கிவிடும்.

அகிலன்: ஆம்! சரி தான்.

ஆசிரியர்: அதற்கான சிறிய அறிவுரை தான் இது.

Send Your Questions & Answer Keys to our email id mkstamilfriendskk@gmail.com

MKS Tamil Friends / YOUTUBE SUBSCRIBE US FOR MORE MATERIAL

Mydeen Matriculation Hr. Sec.School
Melacauvery, Kumbakonam-612 002

1010



மாணவர்கள் : கூறுங்கள்

ஆசிரியர் : ஒரு மாணவர் கொக்கை போல இருக்க வேண்டும். கொக்கு காத்திருந்து, கிடைக்கும் வாய்ப்பை பயன்படுத்திக்கொள்ளும். அதுபோல நீங்களும் உங்கள் எதிர்காலத்திற்கான வாய்ப்பை பயன்படுத்தி வெற்றிபெற வேண்டும்.

மாணவர்கள்: சரி, அம்மா.

ஆசிரியர் : கோழியை போலவும் செயல்படவேண்டும். கோழி குப்பையை கிளறினாலும் தனது உணவை மட்டுமே எடுத்துக்கொள்ளும். அதுபோல நீங்களும் நம்மை சுற்றி இருக்கும் அனைத்திலும் நன்மையை தேர்வு செய்ய வேண்டும்.

மாணவர்கள் : மிகவும் அருமையான கருத்து.

ஆசிரியர் : அனைவருக்கும் புரிந்ததா?

மாணவர் : புரிந்தது ஐயா!

ஆசிரியர் : இதை அனைவரும் பின்பற்றுங்கள்.

மாணவர் : சரி, அம்மா.

(மணி ஒலித்தது).

[வகுப்பு முடிந்தவுடன் அனைவரும் வீட்டிற்கு சென்றனர்],,,

Send Your Questions & Answer Keys to our email id mkstamilfriendskk@gmail.com

## மேல்நிலை வகுப்பு - சேர்க்கை விண்ணப்பம்

சேர்க்கை எண் : 1010

தேதி : 22.01.2020 வகுப்பும் பிரிவும்: பத்தாம் வகுப்பு 'அ' பிரிவு

41)

1. ~~மாணவ~~ / மாணவியரின் பெயர் : அஅஅ (பெயர்),
2. பிறந்த தேததி : 17.02.2005
3. தேசிய இனம் : இந்தியன்
4. பெற்றோர் / பாதுகாவலர் பெயர் : அஅஅ (பெயர்).
5. வீட்டு முகவரி : அஅஅ (தெரு), அஅஅ (ஊர்), அஅஅ (மாவட்டம்)
6. இறுதியாகப் படித்து முடித்த வகுப்பு : பத்தாம் வகுப்பு
7. பயின்ற மொழி : தமிழ்
8. பெற்ற மதிப்பெண்கள் : 496
9. இறுதியாகப் படித்த பள்ளியின் முகவரி : அஅஅ (தெரு), அஅஅ (ஊர்), அஅஅ (மாவட்டம்).
10. மாற்றுச்சான்றிதழ் இணைக்கப்பட்டுள்ளதா? : ஆம், இணைக்கப்பட்டுள்ளது.

| தேர்வின் பெயர் | பதிவு எண் - ஆண்டு | பாடம் | மதிப்பெண் (100) |
|---|---|---|---|
| பொதுத் தேர்வு | 1100771 3311 | தமிழ் | 100 |
| | | ஆங்கிலம் | 99 |
| | | கணிதம் | 99 |
| | | அறிவியல் | 99 |
| | | சமூக அறிவியல் | 99 |
| | | மொத்தம் | 496 |

11. தாய்மொழி : தமிழ்
12. சேர விரும்பும் பாடப்பிரிவும் பயிற்று மொழியும் : உயிரியல் பிரிவு - தமிழ் வழி

மு. பாண்டி

~~மாணவ~~ / மாணவியர் கையெழுத்து

6

5